# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 12,116 — 1960 අප්‍රේල් 25 වැනි සඳුද — 25.4.1960**

**12,116 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 25 ந் திகதி திங்கட்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### விவசாயப் பொருள்கள் கட்டுப்பாடு சட்டம் இல. 29, 1939—6 ம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

1939 ம் ஆண்டு 29 ம் இலக்க விவசாயப் பொருள்கள் (கட்டுப்பாடு) சட்டம் 6 ம் பிரிவு (1) இன்படியும், 1947 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ம் திகதி வெளியிடப்பட்ட 9,773 ம் இலக்க விசேட அரசாங்க வர்த்தமானியில் உள்ள திருத்தப்பட்ட பிரகடனத்தின்படியும் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி விவசாயப் பொருள்கள் (கட்டுப்பாட்டு) சபையினரைக் கலந்து ஆலோசித்த பின்னர், விவசாய உணவு அமைச்சராகிய மோகத்தலாகே டிங்கிரி பண்டா ஆகிய நான் இத்தால் அறிவிப்பதாவது :—

1. (அ) கீழே காட்டியுள்ள அட்டவணையில் 1 ம் கலத்தில் குறிக்கப்பட்டுள்ள பொருள்களை இறக்குமதி செய்ய வேண்டின் இறக்குமதி செய்பவர் 2 ம் கலத்தில் குறிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் பொருள்களை 3 ம் கலத்தில் காட்டியுள்ள விகித எண்கள் பிரகாரம் 4 ம் கலத்தில், சொல்லியுள்ள விலைப்படி வாங்க வேண்டும்.

(ஆ) முன் சொல்லப்பட்ட பிரிவு 6 (1) இன் கீழ் முன்னர் வெளிவந்த அறிக்கைகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு 1,
1960 ம் ஆண்டு எப்றில் மீ 20 ந் உ.

எம். டி. பண்டா,
விவசாய உணவு அமைச்சர்.

அட்டவணை

| கட்டுப்பாடு பொருள் | உள்ளூர்ப்பொருள் | இறக்குமதிப் பொருள் உள்ளூர்ப் பொருள் | விலை அந்தர் ஒன்றுக்கு ரூ. ச. |
|---|---|---|---|
| செத்தல் மிளகாய் .. | இலங்கையில் உண்டாக்கப்படும் செத்தல் மிளகாய் தரம் 1 .. | 200 : 1 .. | 153 13 |
| | மிளகாய் தரம் 2 .. | 200 : 1 .. | 137 25 |
| | மிளகாய் தரம் 3 .. | 200 : 1 .. | 121 39 |
| புளி .. .. | இலங்கையில் உண்டாக்கப்படும் புளி .. .. | 200 : 1 .. | 29.12 |
| சின்னவெங்காயம் .. | இலங்கையில் உண்டாக்கப்படும் சின்னவெங்காயம் .. | — .. | — |
| கோப்பி .. .. | இலங்கையில் உண்டாக்கப்படும் கோப்பி .. .. | — .. | — |
| மிளகு .. .. | இலங்கையில் உண்டாக்கப்படும் மிளகு .. .. | 200 : 1 .. | 377 44 |
| மஞ்சள் .. .. | இலங்கையில் உண்டாக்கப்படும் மஞ்சள் .. .. | — .. | — |
| கடுகு .. .. | இலங்கையில் உண்டாக்கப்படும் கடுகு .. .. | — .. | — |
| பாசிப்பயறு .. .. | இலங்கையில் உண்டாக்கப்படும் பாசிப்பயறு தரம் 1 .. | 200 : 1 .. | 47 04 |
| | தரம் 2 .. | 200 : 1 .. | 42 19 |

## விலைக் கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. எம்.என்./5-1960.

**உப உணவுப் பொருட்கள் (மைசூர்ப் பருப்பு).**

### 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

**நீக்கும் கட்டளை**

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவோடு 3(2) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு மன்னார் மாவட்டத்தின் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு) சண்முகம் பரமநாதன் ஆகிய யான் இக்கட்டளையால்—

27.1.60 ந் திகதி வெளிவந்த 12,045ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் 21.1.60ந் திகதியிட்டுப் பிரசுரமான மைசூர்ப் பருப்பின் விலைகளை நிர்ணயிக்கும், எம்.என்/1-1960 என்னும் இலக்கத்தைக்கொண்ட உணவு விலைக்கட்டளையை இத்திகதியிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

1960 ம் ஆண்டு எப்றில் மாதம் 21 ந் திகதி பி. ப. 3 மணிக்கு மன்னாரில் கையொப்பமிடப்பட்டது.

ச. பரமநாதன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மன்னார் மாவட்டம்.

உணவு விலைக்கட்டளை இல. KU/6/60. உப உணவுப் பொருட்கள் (மைசூர்ப் பருப்பு).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை நீக்கம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3(2) ம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு குருநாக்கல் மாவட்டம் உதவி விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு) வில்பிறெட் பிரான்சிஸ் பேடினன்டோ ஆகிய நான் 1960 ம் ஆண்டு மாசி மாதம் 8 ம் திகதி வெளியான 12,057 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 1.2.60 என்னும் திகதியைக் கொண்ட மைசூர்ப் பருப்பு சம்பந்தப்பட்ட KU/1/60 ம் இலக்க உணவு விலைக் கட்டளையை உடனடியாகவே நீக்கி விடுகிறேன்.

1960 ம் ஆண்டு சித்திரை மாதம் 21 ம் திகதி பி. ப. 3 மணிக்கு குருநாக்கல் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

வி. பி. பேடினண்டோ,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
குருநாக்கல் மாவட்டம்.

---

உணவு விலைக் கட்டளை A 70. உப உணவுப் பொருட்கள் (மைசூர்ப் பருப்பு).

## 1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை நீக்கம்

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3(2) ம் பிரிவுடன் வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்படும் தத்துவங்களைக் கொண்டு அனுராதபுர மாவட்ட உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு), ஜோன் ஙிறன்ஸ் லக்ஸ்மன் மெல்டர் குணறற்ன ஆகிய யான் இக்கட்டளையால் 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 18 ந் திகதி வெளியான 12,037 ம் இலக்க அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 11.1.1960 ம் திகதியைக் கொண்ட மைசூர்ப் பருப்பு சம்பந்தப்பட்ட ஏ. 65 ம் இலக்க உணவு விலைக் கட்டளையை உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 21 ந் திகதி பி. ப. 3.30 மணிக்கு அனுராதபுரக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஜே. சீ. எல். எம். குணறற்ன,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
அனுராதபுரம்.

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## உணவுக் கட்டுப்பாட்டு விளம்பரம்

### 19 வது தொடர்ச்சித் துணைப் பங்கீட்டுப் புத்தகங்களில் உள்ள கூப்பன்களின் வலிமை

1960 ம் ஆண்டு ஏப்றில் மாதம் 20 ந் திகதி வெளிவந்த 12,110 ம் இலக்க இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 18.4.60 ந் திகதியைக் கொண்ட உணவுக் கட்டுப்பாட்டு விளம்பரம் நிராகரிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1959 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ந் திகதி வெளிவந்த 12,002 ம் இலக்க அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 3.12.59 ந் திகதியைக்கொண்ட எனது விளம்பரத்தில் விபரிக்கப்பட்ட 19 வது தொடர்ச்சித் துணைப்பங்கீட்டுப் புத்தகங்களில் உள்ள கூப்பன்களின் வலிமை மாற்றமின்றி உள்ளது.

கே. ஆள்வாப்பிள்ளை,
பதில் உணவு அதிகாரியும் பதில்
உணவுக் கட்டுப்பாட்டதிகாரியும்.

கொழும்பு,
1960 ம் ஆண்டு ஏப்றில் மீ 22 ந் வ.

---

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.